DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.26/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினோதினி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பொன்னுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.08.2022.

**முதல் விசாரணை:**

1. நான் உடுமலையில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 04.03.2021 அன்று பகல் 3.30 மணிக்கு உடுமலையில் உள்ள யுஎஸ்எஸ் காலணியில் உள்ள புற்றுக்கண் கோயில் அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது பைக்கில் என் பின்புறமாக வந்த இரு நபர்கள் என்னிடம் இருந்து போனை பறித்துச்சென்றார்கள். உடனே நான் பயந்து எனது அண்ணன் இடம் கூறி இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** காணமல் போன எனது போனின் மதிப்பு சுமார் ரூ.5000/- இருக்கும் நான் புகார் கொடுத்த இரண்டு மணி நேரத்தில் என்னிடம் இருந்து போனை பறித்தவர்களை பிடித்துவிட்டதாக கூறி அடையாளம் காட்ட காவல் நிலையம் வருமாறு சொன்னதன் பேரில் சென்று அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று பைக்கை ஓட்டி வந்தவர் ஆவார். பின்னால் வந்த இன்னொரு

நபரையும்பார்த்தால் அடையாளம் காட்டுவேன். என்னுடைய செல்போனை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன் (**என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் படித்த கல்லூரி நேரம் என்ன என்றால் காலை 8.30 மணிக்கு தொடங்கி மதியம் 1.30 மணிக்கு முடிந்துவிடும். நான் படித்த கல்லூரி பகுதி நேர வகுப்புகள் நடந்து வந்தது. கல்லூரியில் இருந்து வீட்டிற்கு வருவதற்கு பேருந்தில் தான் வருவேன் என்றால் சரிதான். கல்லூரியில் இருந்து சம்பவத்தன்று உடுமலை பேருந்து நிலையத்திற்கு எப்போது வந்தேன் என்றால் சுமார் 2.30 மணிக்கு வந்தேன். உடுமலை பேருந்து நிலையத்தில் இருந்து என் வீட்டிற்கு நடந்து வருவதற்கு 10 நிமிடம் ஆகும்.

2. நான் நடந்து செல்லும் வழியில் பொதுவாக மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு சற்று முன் சாலைக்கு வலதுபுறமாக அரசு மதுபானக்கடை உள்ளதா என்றால் உள்ளது. அங்குள்ள நான்கு முனை சந்திப்பு பகுதிகள் போக்குவரத்து மிகுந்த மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து என் வீட்டிற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 5 நிமிடம். நான் வீட்டிற்கு செல்லும் வழியில் என்னுடன் கல்லூரியில் படிக்கும் நண்பர்கள் வருவார்களா என்றால் இல்லை.

3. சம்பவம் நடந்த அன்று வாகனத்தில் வந்தவர்கள் தலைக்கவசம் அணிந்து இருந்தார்களா என்றால் இல்லை. என்னிடம் இருந்து செல்போனை பறித்தபோது நான் கூச்சல் போட்டபோது உதவிக்கு யாரும் வந்தார்களா என்றால் இல்லை நான் பயந்து போய் இருந்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கு இடது புறம் நியை கடைகள் உள்ளதா என்றால் உள்ளது. நான் கொடுத்த புகாரில் எதிரியின் அங்க அடையாளம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பைக்கின் பெயர் மட்டும் பல்சர் என்று குறிப்பிட்டுள்ளேன். வேகமாக சென்றதால் முகத்தை பார்க்கவில்லை.

4. எவ்வளவு வேகமாக சென்றாலும் சம்பவ இடத்தில் இருந்து வலைந்து வலைந்து தான் தாராபுரம் பிரதான சாலைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் சத்தம்போடாமல் சென்றேனா என்றால் சத்தம்போட்டு பயந்து தான் சென்றேன். சம்பவ இடத்தில் விபத்து மற்றும் சின்ன பிரச்சனை என்றாலும் கூட்டம் கூடிவிடும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து சம்பவம் நடந்த பிறகு 5 நிமிடத்தில் வீட்டிற்கு சென்றேன். காவல் நிலையத்தில் யார் யார் புகார் கொடுத்தோம் என்றால் நானும் எனது அண்ணனும் புகார் கொடுத்தோம்.

5. புகார் கொடுப்பதற்கு முன்பு என் அண்ணன் சம்பவ இடத்திற்கு வந்து மொபைலை பிடுங்கி சென்றவர்கள் யார் என்று கேட்டு தெரிந்து கொண்டாரா என்றால் அருகில் இருப்பவர்களிடம் கேட்டார். போலிசார் என்னுடைய போன் கிடைத்துவிட்டது என்று எத்தனை மணிக்கு தகல் சொன்னார்கள் என்றால் மாலை 06.00 மணிக்கு. நான் அம்மா மற்றும் அண்ணன் ஆகியோர் காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றோம். காவல் நிலையத்தில் என்னிடம் எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் 3.45 மணிக்கு சம்பவத்தன்று பதிவு செய்தார்கள்.

6. நான் சொன்னபடி எதிரிகள் என்னிடம் இருந்து செல்போனை பிடுங்கவில்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் திருடியதற்கு எதிரிகள் தான் காரணம் என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.